பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 04 2025 **FRIDAY** 6 45 **AM**

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இஸ்லாமியர்களின் நலன் கருதி, நீண்ட ஆலோசனைக்குப் பிறகே வக்ஃப் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- ரசாயனத் துறையில் நீண்டகால வளர்ச்சியை இலக்காக கொண்டு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு ஜேபி. நட்டா தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாடு விண்வெளித் தொழில் கொள்கைக்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நீதிமன்றங்களின் கட்டமைப்பை மேம்படுத்தவும் வழக்கறிஞர்கள் நலனுக்காகவும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.
- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது

>>>>><<<<

இஸ்லாமியர்களின் நலனுக்காகவே வக்ஃப் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இச்சட்டத்தை கொண்டு வந்ததற்காக தாவூதிபோரா முஸ்லிம்கள், பிரதமரை நேற்று சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தங்களது நீண்டகால கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

அனைத்து பிரிவினரின் நலனையும் கருத்தில் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

அப்போது பேசிய பிரதமர், நீண்ட ஆலோசனைக்கு பிறகே இச்சட்டம் கொண்டு வரப்பட்டதாக கூறினார்.

இச்சட்டத்தை கொண்டுவர தாவூதிபோரா சமுகம் ஆற்றிய பங்களிப்புக்கு திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்தார்.

>>>>><<<<

ரசாயனத் துறையில் நீண்டகால வளர்ச்சியை இலக்காக கொண்டு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு ஜேபி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், ரசாயனம் மற்றும் பெட்ரோ ரசாயனத்துறையில் சுயசார்பை அடையும் நோக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்துறை ஒன்று புள்ளி நான்கு சதவீத பங்களிப்பை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்துறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

>>>>><<<<

தமிழ்நாடு விண்வெளித் தொழில் கொள்கைக்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா இத்தகவலை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ராஜா 49 செகண்ட்ஸ்)

>>>>><<<<

நீதிமன்றங்களின் கட்டமைப்பை மேம்படுத்தவும் வழக்கறிஞர்கள் நலனுக்காகவும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

அரசியல் சாசன சிற்பி டாக்டர் அம்பேத்கரின் 135-வது பிறந்த நாள் விழா, அரசியல் சாசனத்தின் 75-வது ஆண்டு விழா, சென்னை எழும்பூர் நீதிமன்றத்தின் 110-வது ஆண்டுவிழா நேற்று சென்னையில் நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய துணை முதலமைச்சர், சென்னையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், 315 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

வழக்கறிஞர்கள் நலநிதியை 7 லட்சம் ரூபாயிலிருந்து 10 லட்சம் ரூபாயாக மாநில அரசு உயர்த்தியிருப்பதாக திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

>>>>><<<<

சர்ச்சைக்குரிய பேச்சு தொடர்பாக, மாநில அமைச்சர் திரு. பொன்முடிக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என காவல்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக விளக்கமளிக்குமாறு, நீதிபதி திரு. ஆனந்த வெங்கடேஷ் மாநில அரசுக்கு உத்தரவிட்டார்.

அமைச்சர் பதவி வகிப்பவர் பொறுப்புடன் பேச வேண்டும் என்று கூறிய நீதிபதி, அமைச்சரின் இந்தப் பேச்சு துரதிருஷ்டவசமானது என்று கூறினார்.

இதையடுத்து, நேற்று மாலை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அமைச்சர் திரு. பொன்முடிக்கு எதிராக ஐந்து புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அந்த புகார்களை சம்பந்தப்பட்ட காவல்நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மாநில அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

திரு. பொன்முடிக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கு விவரங்களை அரசு தாக்கல் செய்ய வேண்டும் எனக் கூறி, விசாரணையை வரும் 23ஆம் தேதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

>>>>><<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் அக்கட்சி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக கூறினார்.

திமுக ஆட்சியின்மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக – பிஜேபி கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<

இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்ட புனித வெள்ளி இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, தேவாலயங்களில் சிறப்பு ஆராதனைகள் நடைபெறுகின்றன.

>>>>><<<<

தமிழகத்தின் சில இடங்களில் இன்று இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<

இருவரிச் செய்திகள்

மியான்மரில் அந்நாட்டுப் புத்தாண்டையொட்டி 4 ஆயிரத்து 900 சிறைக் கைதிகளை அந்நாட்டு ராணுவ அரசு விடுவித்துள்ளது.

>>>>><<<<

அமெரிக்க துணை அதிபர் திரு ஜே.டி. வான்ஸ், இத்தாலி மற்றும் இந்தியாவுக்கு தமது ஒரு வார கால அரசு முறைப் பயணத்தை இன்று தொடங்குகிறார்.

>>>>><<<<

தூய்மை கங்கை இயக்கத்தின் கீழ் தேசிய வன விலங்குகள் நிறுவனம் செயல்படுத்தும் பல்லுயிர் பெருக்கத் திட்டங்கள் குறித்து மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் திரு சி.ஆர். பாட்டீல் ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<

புவனேஸ்வரில் உள்ள மத்திய சாதனங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் குறு, சிறு, நடுத்தர தொழில் துறை அமைச்சர் திரு ஜிதன் ராம் மஞ்சி ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<

வனப் பாதுகாப்பு தொடர்பான இரண்டு நாள் தேசிய பயிலரங்கை மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், போபாலில் இன்று தொடங்கி வைக்கிறார்.

>>>>><<<<

முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று பல்வேறு அரசுத் திட்டங்களை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

>>>>><<<<

கோவையில் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற கார் வெடிப்பு வழக்கு தொடர்பாக 5 பேர் மீது, பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் தேசிய புலனாய்வு முகமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

>>>>><<<<

காஞ்சிபுரத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<

ராமநாதபுரத்தில் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான கோடைகால விளையாட்டு பயிற்சி முகாம் வரும் 25-ம் தேதி முதல் மே 15-ம் தேதி வரை 21 நாட்களுக்கு நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

ராணிப்பேட்டையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 25-ம் தேதி நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் சந்திரகலா கூறியுள்ளார்.

>>>>><<<<

திருப்பூர் மாவட்டம், உடுமலை மாரியம்மன் கோவில் தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று, தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

>>>>><<<<

சென்னை - ஹசரத் நிஜாமுதீன் இடையே ஒரு வழி சிறப்பு ரயில் சேவை இன்று இரவு 11.50-க்கு இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

>>>>><<<<

சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்படும் பள்ளிகளில் காலியாக உள்ள 179 சத்துணவு உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவுள்ளதாகவும் இதற்கு தகுதியுடைய பெண்கள் இம்மாதம் 30-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் எனவும் மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 162 ரன் எடுத்தது.

163 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி, 18 புள்ளி ஒரு ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 166 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இன்று பெங்களூருவில் நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<

புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் செஸ் போட்டியின் நான்காவது சுற்றில், இந்தியாவின் கோனேரு ஹம்பி மற்றும் திவ்யா தேஷ்முக் வெற்றி பெற்றனர்.

இச்சுற்றில் கோனேரு ஹம்பி – ரஷ்யாவின் **Balina-**வையும், திவ்யா தேஷ்முக் - ஜார்ஜியாவின் **Salomi-**யையும் வென்றனர்.

இந்தியாவின் ஹரிக்கா – வைசாலி இடையேயான மற்றொரு ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

>>>>><<<<